# கலைஞர் திரும்பி வந்தால் திகைத்து நிற்பார்!

ப.திருமாவேலன்

இரண்டு பேரைப் பேட்டி கண்டபோது கலைஞர் மீதான மரியாதை அதிகம் ஆனது!

ஒருவர் ஓவியர் ஆர்.நடராசன்! இன்னொருவர் சிற்பி கணபதி ஸ்தபதி!

**பழைய முரசொலி பொங்கல் மலர்களை அலங்கரிக்கும் ஓவியங்களை அதிகம் வரைந்தவர் ஆர். நடராஜன். முதிய நிலையில் இராயப்பேட்டை புதுக் கல்லூரிக்கு அருகில் அவர் வசித்து வந்தார். அவரை 2000ஆம் ஆண்டில் பேட்டி எடுத்தபோது சொன்னார்.. “சேரன் செங்குட்டுவன் படத்தை வரையச் சொன்னார் கலைஞர். நான் வரைந்து காண்பித்தது அவருக்கு திருப்தியாக இல்லை. உடன் வந்தவர்கள் அனைவரையும் வெளியில் போகச் சொன்னார். அந்த அறையில் நாங்கள் இருவர் மட்டுமே இருந்தோம். தோளில் கிடந்த துண்டை எடுத்து பக்கத்தில் இருந்த நாற்காலியில் தூக்கிப் போட்டுவிட்டு... கையை தூக்கி... வாள் இருப்பதாக நினைத்துக் கொண்டு குரல் உயர்த்தி கர்ஜித்தார். அவரது முகமும், வாயும் நடுங்கியது... கால் இரண்டும் முன்னும் பின்னுமான பாயும் நிலையில் இருந்தது. ‘இப்படி வரையுங்க’ என்றார். வரைந்தேன். அச்சு அசலாக சேரன் செங்குட்டுவன் போலவே இருந்தது” என்றார் ஓவியர் நடராசன். கலைஞர் என்று சொல்வது - யாரோ பட்டம் கொடுத்து விட்டார்கள் என்பதற்காக அல்ல. கலைஞராகவே உள்ளுள் இருந்தார்!**







கணபதி ஸ்தபதி சொன்னார்: ‘சொல்லைத் தேர்ந்தெடுத்த கலைஞர், கல்லைத் தேர்ந்தெடுத்து இருந்தால் இந்தியாவில் புகழ் பெற்ற சிற்பியாக ஆகி இருப்பார்’ என்றார். பாவை மன்றத்துத் தூண் ஒன்றில் இடது கையில் கண்ணாடி வைத்து வலது கையால் கண்ணுக்கு மையிடும் பெண்ணை கணபதி ஸ்தபதி சிற்பமாக வடித்திருக்கிறார். அதைப் பார்த்த கலைஞர், ‘அந்தப் பெண்ணின் முகம் அந்த கண்ணாடியில் தெரியலாமே’ எனச் சொல்ல அந்த சிற்பத்தை மெருகேற்றி இருக்கிறார் கணபதி ஸ்தபதி. பூம்புகார் முதல் வள்ளுவர் கோட்டம் முதல் செதுக்கியது ஸ்தபதியாக இருந்தாலும் அதற்கு தூண்டுதல் கலைஞர்.

இவர்தான் கலைஞர். இத்தகைய கலைஞர் இப்போது திரும்பி திருவாரூர் வந்தால்... மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் உருவாக்கித் திறக்கப்பட்ட ‘கலைஞர் கோட்டத்தை’க் கண்டால் திகைத்துப் போவார்!

‘என்னிடம் கற்ற திறமைகளை எனக்கே காட்டிவிட்டீர்களே’ என்று மலைத்தும் போவார்!

‘வான்புகழ் கொண்ட வள்ளுவனுக்கு கோட்டம் கண்ட எனக்கே - நானே திகைத்து நிற்கும் வகையில் கோட்டமா?’ என்று ஆச்சர்யம் அடைவார். தனது செயலும், உழைப்பும், சிந்தனையும், திறனும் தன் காலத்தைக் கடந்தும் காலாகாலத்துக்கும் நிற்கும் என்பதைக் கலைஞர் அறிவார். அதனை மொத்தமாக ஒரு உயிர்க் கோட்டம் எழுப்புவார்களா என்ற கற்பனை அவருக்கு இருந்திருக்காது. கலைஞர் காணாத கனவு இன்று நிறைவேறி இருக்கிறது.



**‘நெஞ்சுக்கு நீதி’யைக் கூட புத்தகமாகத்தான் எழுதினார். அதுவும் 2002 ஆம் ஆண்டோடு ஆறாவது பாகமாக முடிந்துவிட்டது. ஏழாவது பாகத்தை அவரால் தொடர முடியவில்லை. அவரால் எட்ட முடியாத ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது பாகத்தை கல்லால் - ஓவியமாய் - ஒலிப்படமாய் - ஒளிக் காட்சியாக கொண்டு வந்து காட்டிவிட்டார் கலைஞரின் கொள்கை வாரிசு.**

“ பாதிச் சரித்திரத்தை நான் எழுதி விட்டேன். மீதியை என் தம்பி கலைஞர் எழுதுவார்” என்றார் பேரறிஞர் அண்ணா. கலைஞரின் பாதிச் சரித்திரத்தையும் கல்லாணி கொண்டு தீட்டிவிட்டார் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள். “என் தம்பி கருணாநிதி சிறை இருக்கும் பாளையங்கோட்டை சிறை, கழகத்தவர் செல்ல புண்ணியத் தலம்” என்றார் அண்ணா. கலைஞரின் கோட்டம் என்பது கழகத்தவர் மட்டுமல்ல, தமிழ்நாட்டவர் மட்டுமல்ல, உலகத்தவர், மனிதத்துவர் அனைவரும் சென்று காணவேண்டிய அறிவுக் கருவூலமாக அமைந்திருக்கிறது.

**திருவாரூரில் 13 வயதில் கொடி தாங்கிக் கிளம்பிய சிறுவன், சாதித்த சாதனைகளா இவை என்பதை உலகம் உணரும். கல்லூரி காணாத, உயர் குலத்தில் பிறக்காத, தூக்கிவிட கனவான்கள் இல்லாத ஒருவரால்தான் இத்தனை சாதனைகளைச் செய்ய முடிந்துள்ளது. அத்தகைய சாதனைச் சரித்திரத்தின் கட்டட வடிவமாக இந்தக் கோட்டையை எழுப்பி இருக்கிறார் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

நிறைவுற்ற கலைஞருக்கு அவர் பிறந்த ஊரில் நினைவுச்சின்னம் அமைக்க வேண்டும் என்று தானும் தனது சகோதரி செல்வி அவர்களும் முடிவெடுத்து திருவாரூரில் நிலம் வாங்கி - தயாளு அம்மையார் பெயரில் அறக்கட்டளை தொடங்கி இந்தக் கோட்டத்தைக் கட்டத் திட்டமிட்டோம் என்று தலைவர் அவர்கள் இதற்கான விதை போட்ட நேரத்தை விளக்கி இருந்தார்கள்.




**வாங்கிய நிலம், கலைஞர் அவர்களால் ‘ஏவாமலேயே வேலை பார்க்கும் வேலு’ என்று அடையாளப்படுத்தப் பட்ட எ.வ.வேலு அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. பெருந்தச்சனாகவே மாறுகிறார் எ.வ.வேலு. அதனால்தான் தனக்கு இட்ட பொன்னாடையை அவருக்கு வழங்கிப் பாராட்டினார் முதலமைச்சர் அவர்கள்.**

மிகமிக நீண்ட வாழ்க்கை கலைஞருடையது. மிகமிக அதிக பரிமாணங்கள் கொண்டவர் கலைஞர். பார்க்காத உயரமும் இல்லை, சந்திக்காத சோதனைகளும் இல்லை. குடிசை முதல் குடியரசுத் தலைவர் மாளிகை முதல் அவர் நிழல் பட்டது. இதழியல் - இலக்கியம் - அரசியல் - நாடகம் - திரை என எல்லா இடங்களிலும் அவர் குரல் ஒலித்தது. தூங்கும் நேரமும் எழுதினார். எழுத்துகூட அவருக்கு ஓய்வெடுக்கும் ஒரு உத்தியாக இருந்தது. கோட்டைக்குள் ஐந்து முறை ஆட்சி செலுத்தும் உரிமை கிடைத்தது. அதிகமான கோப்புகளில் கையெழுத்துப் போட்டு தமிழ்நாட்டைச் செதுக்கினார். இத்தனை பரிமாணம் கொண்ட ஒரு மனிதரை எப்படி முழுமையாக எடுத்துரைப்பது?

‘திருவாரூர் - கலைஞர் கோட்டம்’ சென்று வாருங்கள்... 95 ஆண்டுக் கலைஞரோடு வாழ்ந்த அனுபவம் உங்களுக்குக் கிடைக்கும். அவரது வாழ்க்கை நிகழ்வுகள் ஓவியமாக, சிற்பமாக காட்சி தருகிறது. அரசியல் பயணங்களை காட்சியாகப் பார்க்கலாம். திரையுலகக் கலைஞரை திரையாகக் காணலாம். அவராட்சி செய்த கோபாலபுரத்து கொலு மண்டபத்து அறையை விஷுவல் திரையில் காணலாம். விஷுவல் கண்ணாடியை அணிந்து பார்த்தால் அவரது அறைக்குள் நீங்கள் இருப்பீர்கள். அவரது கண்ணாடி உங்கள் கைக்கு வரும், அவரது மோதிரத்தை எடுத்துப் பார்க்கலாம். தொடு திரையில் கலைஞரின் வரலாறு குரலாக வரும். தமிழ்காக்க பாளைச் சிறையில் இருந்த வரலாறு, கண்ணுக்கு முன்னால் கட்டமைக்கப்பட்டுள்ளது. ‘தன்னை வெல்வான் தரணி வெல்வான்’ என்றார் அண்ணா. தரணி வென்ற கலைஞருக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலி காலியாக இருக்கிறது. அதில் உட்கார்ந்து கலைஞரோடு புகைப்படமும் எடுத்துக் கொள்ளலாம். இவ்வளவும் இருக்கிறது திருவாரூர் கலைஞர் கோட்டத்தில். கலைஞர் மலைக்க மாட்டாரா?

கோபாலபுரத்தில் கலைஞரின் நிழலாக இருந்து மறைந்த செயல் மணி ஒருமுறை சொன்னார்: ‘ஐம்பது வருஷமா அவரைப் பார்த்துட்டு இருக்கேன். இன்னும் முழுமையா என்னாலயே பார்த்து முடிக்க முடியல’ என்று சொன்னார். அப்படிப் பட்ட ஆற்றலாளர் கலைஞர். அந்த ஆற்றலை அறிய வேண்டுமா?

**‘இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா..’ என்ற கலைஞரின் கவிதையை வானொலியில் கேட்கிறார் தந்தை பெரியார். கலைஞருக்கு போன் செய்கிறார். ‘ அய்யா... நீங்க இவ்வளவு பெரிய புலவர்னு தெரியாம போச்சேய்யா’ என்றாராம். ‘இப்படி நமக்குத் தெரியாத எத்தனையோ**



**திறமைகள் கலைஞரிடம் உண்டு’ என்று எழுதினார் தந்தை பெரியார். இந்தத் திறமைகளை முழுமையாக அறிய வேண்டுமா?**

‘தம்பி கருணாநிதியின் வெற்றிக்குப் பின்னால் இருக்கும் ரகசியத்தை அறிய வேண்டுமானால் அவர் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் தூங்குகிறார் என்பதை ஒளிந்திருந்து தான் பார்க்க வேண்டும்’ என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த ரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமா?

திருவாரூர் கலைஞர் கோட்டம் உங்களை அன்புடன் அழைக்கிறது!

